2013 ஏப்ரல் 16]

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

237—

குடமுழுக்கு

***4116—திரு. ப. சிவக்கொழுந்து:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், பண்ருட்டி வட்டம், திருவதிகை அருள்மிகு வீரட்டானேசுவரர் திருக்கோயில் தேரினைச் சீரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், பண்ருட்டி வட்டம், திருவதிகை அருள்மிகு வீரட்டானேசுவரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் மூன்றாம் நிலை செயல் அலுவலர் மற்றும் தக்காரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான சுவாமி தேரினைச் சீரமைக்க ரூபாய் 9 இலட்சமும், தேர் அச்சு மற்றும் சக்கரத்திற்கு ரூ.3.5 இலட்சமும் நிதி உதவி வழங்கப்பட்டு, திருத்தேர் திருப்பணி வேலைகள் 80 சதவிகிதம் முடிவுற்றுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மேலான அனுமதியுடன், வரும் வைகாசி மாதம் திருக்கோயில் தேரோட்டம் நடத்தப்படும். மேலும், திருக்கோயில் திருப்பணிக்கென அரசு மானியமாக ரூ.8.5 இலட்சமும், உபயதாரர் பங்களிப்பாக சுமார் ரூ.20 இலட்சமும் வழங்கப்பட்டு, திருக்கோயில் திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே கடந்த 1–6–2012 அன்று குடமுழுக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.*

திரு. ப. சிவக்கொழுந்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி என்பது கடலூர் மாவட்டத்திலே உள்ளது. திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே விழுப்புரம் மாவட்டம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. பண்ருட்டி திருவதிகை அருள்மிகு வீரட்டானேசுவரர் திருக்கோயில் என்பது சுமார் 1,700 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில். அங்கே தேர் சீரமைக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்படுமா என்பது கேள்வி. இந்தக் கேள்வி குடமுழுக்கு செய்வதற்கு 6 மாதத்திற்கு முன்பு போடப்பட்டது. இருந்தாலும், 1–6–2012 அன்று குடமுழுக்கு செய்யப்பட்டது. தேர் 10 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே பழுதாகி என்ற ஒரு நிற்கின்றது. தேர் செப்பனிடப்பட்ட பிறகு, குடமுழுக்கு செய்ய வேண்டும் என்பதுதான் அந்தப் பகுதி மக்களுடைய ஆசை. ஆனால், தேர் பழுது நீக்குவதற்கு முன்பே குடமுழுக்கு செய்யப்பட்டது. இருந்தாலும், வருகின்ற வைகாசியிலே தேர் ஓடும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மிக்க நன்றி.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதிக்கு தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் சார்பிலே பல பேர் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கேட்டாலும், வாய்ப்பு கேட்ட மற்றவர்களைக் கேப்டன் அவர்கள் சமாதானப்படுத்தி, எனக்கு வாய்ப்பளித்து, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கியிருக்கிறார். நான் ** என்றும் கேப்டனுக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன் என்பதைக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். (குறுக்கீடுகள்)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்விதான் கேட்க வேண்டும். இதையெல்லாம் பேசக்கூடாது. ஆகவே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு)

வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. எல். வெங்கடேசன், இருக்கையில் அமர்ந்துகொண்டு இதுமாதிரியெல்லாம் பேசக்கூடாது. உட்காருங்கள்.

238—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***19871—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி மற்றும் ஆவுடையார்கோவிலில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளை முன்வைத்திருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்ட சம்பந்தப்பட்ட பொதுப் பணித் துறையினுடைய தோராய மதிப்பீட்டு அறிக்கையை தலைமைப் பொறியாளரின் ஒப்புதலைப் பெற்று அனுப்பிவைக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டவுடன், புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.